R 1338

# "இயேசுவுக்காய் வாழ்தல்"

## LIVING FOR JESUS

ஒவ்வொரு நாளும் இயேசுவுக்காக வாழவேண்டுமே
அவர் எந்த வழியில் நடத்துகின்றாரோ, அதிலேதான் பின்செல்ல வேண்டுமே
பெரிதானதோ, சிறிதானதோ, ஒருபோதும் வாய்ப்பை நழுவ விடலாகாதே,
அவரது விருப்பம் செய்வது ஒன்றே, அது மாத்திரம் போதுமே!
அழுகையை பாடலாலும் புன்னகையாலும் பின்னுக்குத் தள்ள வேண்டுமே,
சூட்டிகையான ஒருவரைக் கண்டால் இந்த உலகம் அதனை அறியாதே,
எங்கேயும் எப்போதும் இயேசுவுக்காய் வாழ்ந்தாலே, அவர் துன்பப்படும் ஆத்துமாவைத்
தேற்றிடுவாரே, அங்கேயும் இங்கேயும் விதைகளைத் தூவிச் செல்வாய், கனி எப்போது
காய்க்கும், எப்படிக் காய்க்கும்,
எந்த அளவில் காய்க்கும்,
என்றே கவலை கொள்ள வேண்டாம், நிச்சயம் காய்க்கும்.
அறுவடையை ஆண்டவர்தாமே வீட்டிற்கே கொணர்ந்திடுவார்,
துன்பத்திலும், இன்பத்திலும் இயேசுவுக்காய் வாழ்வதுவே,
மகிழ்ச்சியோ, கவலையோ, வெளிச்சமோ, மழையோ,
கசப்பிலிருந்தும் இனிப்பிலிருந்தும் அபூர்வமான மலர்களைத்
தெரிந்தெடுத்தாரே, அவர் பாதத்தண்டையிலே அமர்ந்து கேட்கும்போதினிலே,
மாபெரும் பாடங்களைக் கற்றுக்கொள்வோமே, இயேசுவுக்காய் வாழ வேண்டுமே,
சிறுசிறு செயல்கள் தாமே,
நம் தினம்தோறும் வாழ்வினிலே சிறகுகள் முளைத்திடுமே,
வேகமான, விவேகமான, வலிமையான வீரம் நிறைந்த தூதர்களே,
தேவன் ஒருவர் மாத்திரம் அறிவாரே,
ஒரு ஆத்துமாவைக் காப்பாற்றலாம் என்றே,
இயேசுவுக்காய் வாழவேண்டுமே, வாழ்கிறோம் இறக்கவில்லையே,
தலையான அருவியிலிருந்தே செல்வாக்கு மிகுந்த வாழ்க்கைதனை,
பெற்றிடுவோமே, அமைதியாகவே நீர் பாய்ச்சி விடுகின்றார்,
அதனைக் காண்பதற்கில்லை, வாழுகின்ற அந்த நீரோடையினின்றே
பல வாழ்க்கைகள் வாழக் கிடைக்கின்றதே இயேசுவுக்காய் வாழ வேண்டுமே,
அவருக்குள் அடங்கியிருக்க வேண்டுமே!
அவருடைய வாழ்க்கை பூரண சமாதானம் ஓய்வும் நிறைந்ததுவே,
பாவத்திற்காய் பாவ நிவாரணம் கொடுக்கப்பட்டதே, என்னுடைய எல்லாமும்
முழுமையடைந்ததே, செல்வாக்கு மிகுந்ததே
ஆவியிலே மகிழ்ந்து நிறைந்து, இனிமையாகவே தேற்றப்பட்டதுவே,
மகிமை நிறைந்த தேவகுமாரனே, உம் போலவே இப்படித்தான்
என் வாழ்க்கை அமைய வேண்டுமே, இறைநிறைந்த அற்புதமான
ஐக்கியம் நம் தந்தையுடனே இங்கே ஆரம்பமானதே, எனவேதான் நான் வாழுகின்றேனே
இயேசுவுக்காகவே

==============